கீழடி அகழாய்வு தொடர்பாக கடுமையான பரிசோதனைகள் மூலம் நாம் நிறுவியுள்ள

# தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைக்கு - ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பதா?

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 15–

“கீழடி அகழாய்வு தொடர்பாக கடுமையான பரிசோதனைகள் மூலம் நாம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைக்கு – ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பதா? எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டு தான் இருக்கிறது. காலமும் கூட!” என நேற்று வெளியிட்ட வலைதளப் பதிவொன்றில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கீழடி அகழாய்வு தொடர்பாக அறிக்கைகள் அளித்த பின்னரும் ஒன்றிய அரசு மேலும் சான்றுகள் கேட்பது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கீழடி அகழாய்வில் இருந்து உலக அளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக்கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், AMS அறிக்கைகளை அளித்த பின்னரும், மேலும் சான்றுகள் தேவை என்கிறார்கள் அவர்கள்! இதோ சான்று!**

**இதற்கு நேர்மாறாக, மதிப்புமிக்க வரலாற்றாய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள் கடுமையாக எதிர்க்கும் நிலையிலும், கற்பனையான சரஸ்வதி நதி நாகரிகத்தை பா.ஜ.க. ஆதரிக்கிறது. எந்த நம்பத்தகுந்த சான்றும் இல்லாமல் இதனை அவர்கள் முன்னெடுக்கிறார் கள். ஆனால் நாம் கடுமையான பரிசோதனைகள் மூலம் நிறுவியுள்ள தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் புறந்தள்ளுகிறார்கள்.**

**கீழடி மற்றும் தமிழ் மரபுசார் உண்மையைப் பொறுத்தவரை பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ் கும்பல் கதறுவது சான்றுகள் இல்லை என்பதால் அல்ல; கீழடி காட்டும் உண்மை அவர்கள் முன்னெடுக்கும் ‘ஸ்க்ரிப்ட்’க்கு எதிரானதாக இருப்பதால்தான்.**

**எங்கள் வரலாற்றை வெளிக்கொணர பல நூறாண்டுகள் போராடினோம். அதனை எப்படியாவது மறைத்து அழிக்க ஒவ்வொரு நாளும் அவர்கள் முயல்கிறார்கள்.**

**எல்லாவற்றையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டுதான் இருக்கிறது. காலமும் கூட!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# ‘நெய்தல் கலைத் திருவிழா 2025’ முன்னேற்பாடு பணிகள்! கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு!

தூத்துக்குடி, ஜூன் 15–

தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிகம் போன்றவற்றைப் பறைசாற்றும் வகையில் தூத்துக்குடியில் ஜூன் 13 முதல் 15 ஆம் தேதி வரை 4–வது நெய்தல் கலைத் திருவிழா தூத்துக்குடி வ.உ.சி கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, செய்யப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி 12.06.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெய்தல் கலைத் திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 300–க்கும் மேற்பட்ட மண் சார்ந்த கலைஞர்கள், தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். இந்த விழாவானது மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

இந்த விழாவில் கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பறையாட்டம், குச்சியாட்டம், துடும்பாட்டம், ஜிம்பளா மேளம், பொய்க்கால் குதிரை, கிராமிய நிகழ்ச்சி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெய்தல் திருவிழாவின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பாரம்பரிய உணவு வகைகளை அறிந்து கொள்ளும் வகையில் 20–க்கும் மேற்பட்ட அரங்குகள் மற்றும் நபார்டு சார்பில் 30க்கும் மேற்பட்ட காட்சிப்படுத்தப்பட உள்ளது.

முதல் நாளான ஜூன் 13–ம் தேதி தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளி சார்பில் நிகழ்ச்சி தொடக்க விழா, மங்கல இசை நிகழ்ச்சி, சார்பில் அபிநயா நிருத்தாலய நடன பள்ளியின் சமர் கலைக்குழு சார்பில் பரதநாட்டியம். பால் ஜேக்கப்பின் ஃபங்கி போதியின் சென்னை சங்கமத்தின் (2025) தொடக்க விழா இசை. சோல்டவுட் இசைக்குழுவின் ஒளி இசை நிகழ்ச்சி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*வேலூர், ஜூன் 15-*

*வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*



*வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசர கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நாளை (16.06.2025-திங்கட் கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.*

*எனவே வேலூர் மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாநில கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள் ஆகியோர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*பொருள்:*

*1.கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு வருகை குறித்து*

*2.கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

தமிழ்நாட்டின் பகைக் கூட்டத்தை மக்களின் துணைகொண்டு வீழ்த்திடுவோம்!

# வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப்பணியாற்றிட ‘உடன்பிறப்பே வா!’

## சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பழைப்பு!

சென்னை, ஜூன்.15–

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின்அவர்கள்நேற்றுமுன்தினம் (13.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும்நிகழ்வின்முதல்கட்டமாக, சிதம்பரம், விழுப்புரம் மற்றும் உசிலம்பட்டி ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.



இதனை அடுத்து, சமூக வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப் பணியாற்றிட உடன்பிறப்பே வா!” என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**“தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கான வளர்ச்சியைச் சாத்தியப்படுத்தியுள்ள நமது திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடவும் தமிழ்நாட்டை வீழ்த்தத் துடிக்கும் வீணர்களுக்குத் தோல்வியைப் பரிசளித்து விரட்டிடவும் வலிமையான கழகக் கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப் பணியாற்றிட உடன் பிறப்பே வா!**

**தமிழ்நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கத் திட்டமிடும் பகைக் கூட்டத்தை மக்களின் துணை கொண்டு வீழ்த்திடுவோம்!”**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!

# துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!















சென்னை, ஜூன் 15–

தி.மு.கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், சமூக வலைதளம் சார்ந்த அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பொறுப்புக்கு, தமிழ்நாடு முழுவதும் இருந்து 1400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த நிலையில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள், இப்பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் இதுவரை ஆற்றிய பணிகள். கொண்டு வந்திருந்த ‘மினிட்’ புத்தகங்கள் அவர்களின் சமூக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாநில துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலையில், காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களுக்கான சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை நேற்று முன்தினம் நேர்காணல் செய்தார்.